இன்று மாபெரும் ஊர்வலம்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

சுடர்

முரசு 2 29-1-86 புதன் தை 16 ஜ. அவ். 18) முழக்கம் 854

வடக்குக் கிழக்கிலிருந்து சகல ஆயுதப்படையினரையும் திருப்பி அழைக்குமாறும், ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறும் கோரி வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு இன்று காலை யாழ்நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்த தீர்மானித்துள்ளது. அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், சுப்பந்தகள, கூட்டுறவாளர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என்று பல்துறையைச் சேர்ந்தவர்களும் ஆண்கள், பெண்கள், சிறியவர், முதியவர் என்ற பாகுபாடின்றி இவ்வூர்வலத்தில் பங்குபற்றுவர். கூட்டுறவுச் சங்கங்களின ஊர்வலம் யாழ். இந்துக்கல்லூரச் சந்தயலருந்தும், வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் ஊர்வலம் வண்ண வெங்கடேசப் பெருமாள் கோவிலிலிருந்தும் ஆரம்பமாக யாழ்ப்பாணம் 6ம் பக்கம் பார்க்க

★ கடைகளுக்குத் தீ வைப்பு
★ ரயில் சேவைகள் நிறுத்தம்
★ பஸ்களுக்குக் கல் வீச்சு
★ தோட்டங்களில் வேலை நிறுத்தம்

மலையகத்தில் கொந்தளிப்பு!

ஒன்பது இடங்களில் ஊரடங்கு

ராணுவம் சுட்டு கடைக் கொள்ளையர் பலி

(நுவரெலியா)

தைப்பூசத் திருவிழாவுடன் தலவாக்கொல்லைப் பகுதியில் ஆரம்பமான சிங்கள - தமிழ் இன மக்களுக் கிடையேயான கலவரம், இப்போது மலையகத்தின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளதால் இங்கு கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. இதனால் இங்கு ஒன்பது இடங்களில் நேற்றிரவு ஏழு மணிமுதல் இன்று காலை பத்து மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்படுகின்றது.

கொழும்பிலிருந்து பதுளை சென்ற உடரட்ட மெனிக்க ரயில் ஹற்றனுடன் திருப்பி அனுப்பப்பட்டதுடன், மறு அறிவித்தல் வரை இப்பகுதிக்கான ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன.

சுமார் நாற்பதுக்கும் அதிகமான பஸ்கள் தாக்கப்பட்டு, கல் வீச்சுக்குள்ளானதால் பல பகுதிக்கான பஸ் சேவைகள் ரத்தாகின.

தலவாக்கொலவில் சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் கொள்ளையிலீடுபட்ட ஒருவர் ராணுவச் சூட்டுக்குப் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

—6ஆம் பக்கம் பார்க்க

பிரார்த்தனை இயக்கம்

யாழ்மாவட்டத்தின் சகல துறையினரையும் உள்ளடக்கிய

—6ஆம் பக்கம் பார்க்க

செயலக மறியல் இன்றுடன் நிறுத்தப்படும்

இன்று ஆறுவது நாளாக நடைபெறும் செயலக மறியல் போராட்டத்தை பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சில தினங்களுக்கு ஒத்திவைக்க அன்னையர் முன்னணி தீர்மானித்துள்ளது. நாளை முதல் இங்கு மறியல் இடம்பெறாது.

இவ்மறியல் போராட்டம் காரணமாக யாழ். செயலகத்திலுள்ள அனைத்து அலுவலகங்களும் கடந்த சில தினங்களாக இயங்கவில்லை இதனால் உணவு, எரிபொருள் விநியோக அனும திப்பத்திரவழங்கல், ஓய்வூதிய, வேதன பதிவேட்டுத் தயாரிப்பு போன்ற பல கருமங்கள் நடைபெறவில்லை. இதனால் பொது மக்களுக்கு ஏற்படும வசதியீனங்களை கருத்தில் கொண்டு இவ் மறியல் போராட்டத்தினை சில தினங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அன்னையர் முன்னணி செயலாளர் திருமதி நிர்மலா பாலரெட்ணம் தெரிவித்தார்.

சில தினங்கள் இடைவெளியின் பின் இப்போராட்டத்தை வேறுவிதத்தில் குடாநாட்டின்

...6ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதியிடம் டிக்ஸிற் கூறினார்

லலித் அழைப்பு நிராகரிப்பு

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அன்னையர் முன்னணியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் தொடர்பாக தன்னைச் சந்திக்குமாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் விடுத்த அழைப்பை அன்னையர் முன்னணியினர் நிராகரித்துள்ளார்கள்.

எதிர்வரும் சனிக்கிழமை

...6 ம் பக்கம் பார்க்க

வவுனியா நகரில் நேற்றும் முகமூடி மனிதர்கள் பவனி

(வவுனியா)

நேற்றைய தினமும் முகமூடித் தலையாட்டி மனிதர்களுடன் வவுனியா கச்சேரிச் சந்தி, மன்னார்வீதி ஆகிய இடங்களில் கடும் சோதனை நடைபெற்றது. கடைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும் மக்கள் நடமாட்டம் மிகக்குறைவாகவே காணப்பட்டது.

வவுனியா கூட்டு ஆயுதப்

...6ம் பக்கம் பார்க்க

முல்லைத்தீவு தாக்குதலில் பீரங்கிகள், லோஞ்சர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள மதில்கள், கட்டடங்கள் தடைகளை அகற்றும் வேலையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தபோது போராளிகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலைத் தொடர்ந்து இரு பகுதியினருக்குமிடையே கடும் துப்பாகிச் சமர் இடம்பெற்றுள்ளது.

பல மணிநேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற இச்சண்டையில் றொக்கட் லோஞ்சர் உட்

... 6ம் பக்கம் பார்க்க

கரடிப்போக்கு பாலம் தகர்ப்பு

கிளிநெ ச்சி கரடிபோக்குச் சந்திப்பாலம் நேற்றுக்காலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகளை உடன்நிறுத்துக இராணுவத் தீர்வு சரிவராது

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது குறித்து இந்திய அரசு இலங்கையிடம் மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து நேற்று முன்தினமிரவு இதனைத் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை நிலைமையை மேலும் மோசமாக்குவதுடன் பொது மக்களையும் பாதிப்படையச் செய்யும் என இந்திய அரசு கருதுவதாக திரு டிக்ஸிற் அவரிடம் எடுத்துரைத்தார்.

...6ஆம் பக்கம் பார்க்க

பிரஜாவுரிமை சட்டம் முரணல்ல

பிரஜாவுரிமைச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல என்றும், சட்டத்தின் ஒரு பிரிவை மட்டும் திருத்தி

... 6 ம் பக்கம் பார்க்க

மாநகரசபையின் ஏழாவது ட்ராக்டரும் பறிபோனது

நகர சுத்திகரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான ட்ராக்டர் ஒன்று நேற்றுக்காலை இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபையின் ஆறு ட்ராக்டர்கள் ஏற்கனவே கடத்தப்பட்டுள்ளன. நேற்றுக்

...6ஆம் பக்கம் பார்க்க

துணைவேந்தர் 'வித்தி' வேண்டுகோள்

சித்த வைத்திய பெருமையை மக்களிடம் பரப்பி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்

(வண்ணார்பண்ணை)

'சித்த வைத்தியர்கள் சிலர் நோயாளிகளின் திருப்திக்காக ஆங்கில மருந்துகளையும் சேர்த்தே வழங்குகின்றனர். இந்நிலை மாற்றப்பட்டு சித்த வைத்தியத்தின் புனிதம், பெருமை பாதுகாக்கப்பட வேண்டும். மாணவர்களும், வைத்தியர்களும் சித்த வைத்தியத்தைப் பற்றி மக்களுக்கு தெரியப்படுத்தி அதில் நம்பிக்கைகொள்ள வைக்க வேண்டும்.''

...6ஆம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது சுடர்

வரி விளம்பரம்

விற்பனைக்கு

ரோசா செடிகளுக்கான 'அதி விசேஷ உரம்' எங்களிடம். மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. Forage Stores No. 208, 1 st Cross St., Jaffna. P. 22611. R/16371

விற்பனைக்கு

கருவாடுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் (50 கி. மூடை) விற்பனைக்குண்டு. M G M. Forage Stores. No. 208, 1st Cross St. and 781, K. K. S. Rd., Jaffna R/16370

தவறிவிட்டது

கந்தையா - சதாசிவம், அடையாள அட்டை இல. 240820676V, கந்தர்மடத்திலிருந்து ஆஸ்பத்திரி ரோட்டில் (ஆரியகுளம் லேன், வேம்படி ஆஸ்பத்திரி முன்பக்கம்) தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். R/16393

24 லொறியால் பதற்றநிலை

(ஏழாலை)

இராணுவத்தினரின் தேவைக்காகக் கப்பலில் கொண்டு வரப்பட்ட பொருட்கள் இருபத்திநாலு லொறிகளில் ஏற்றப்பட்டபின் அவற்றை வீதியூடாகக்கொண்டு செல்வதில் பல பிரச்சினை ஏற்பட்டதாக அறியப்படுகிறது. இதனையொட்டி பிற்பகலில் ஹாபர் வியூ முகாமிலிருந்தவர்கள் முகாமைவிட்டு வெளியேறி வீதியூடாக வந்த போது அப்பகுதிக்கடைகள் யாவும் பூட்டப்பட்டதுடன் பதற்ற நிலையையும் தோற்றுவித்தது.

எச்சரிக்கை

கசிப்பு முதலாளிக்கு

(நீர்வேலி)

நீர்வேலிக் கந்தசுவாமிகோவிலிற்கு அருகே உள்ள கசிப்புக் குகை ஒன்றை முற்றுகையிட்ட இளைஞர்கள் குழுவினர் அக்குகையின் உரிமையாளரை எச்சரித்து விட்டு பல பரல்களில் காணப்பட்ட கசிப்பை நிலத்தில் ஊற்றியதுடன் சில பரல்களை கசிப்புடன் எடுத்து வந்து நீர்வேலிச் சந்தியில் ஊற்றி, வெற்று பரல்களை சந்தியில் பொது மக்கள் பார்வைக்காக வைத்தனர்.

மரண விசாரணையில் மனைவி:

பாண் விற்கப்போனவரை சடலமாகக் கண்டேன்

(புலோலி)

"பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு அண்மையில் நீதிமன்றச் சந்தியில் சடலம் ஒன்று இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்று பார்வையிட்ட போது எனது கணவர் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். இராணுவத்தினரின் அனுமதியுடன் சடலத்தை வீடு கொண்டுவந்தோம்."

இவ்வாறு, துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான பருத்தித்துறை பாண் வியாபாரி தங்கராசாவின் மரண விசாரணையின்போது சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி திருமதி தமிழரசி தங்கராஜா (39) குறிப்பிட்டார். பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை விசாரணைகளை மேற்கொண்டார். கிராம சேவை அலுவலர் திரு. எஸ். தியாகராசா சாட்சிகளை ஆஜர் செய்தார். தொடர்ந்து சாட்சியமளிக்கையில் திருமதி தமிழரசி தங்கராசா குறிப்பிட்டதாவது:

இறந்த எனது கணவர் பாண் விற்பனை செய்பவர். இவர் நாள்தோறும் காலை வேளையில் தொழிலுக்குச் சென்று இரவு எட்டு மணி போலவே வீட்டிற்கு வருவது வழக்கம். சம்பவ தினமும் காலை சென்றவர் இரவு 8-00 மணிக்குப் பின்னரும் வீட்டிற்கு வராதபடியால் அவரைத் தேடினோம், காணவில்லை. மறுநாட் காலை நீதிமன்ற வீதியும், விநாயகமுதலியார் வீதியும் சந்திக்கும் இடத்தில் பிரேதம் ஒன்று கிடப்பதாகக் கேள்விப்பட்டு நானும், எனது தகப்பனாரும், எனது மகளும் அவ்விடத்திற்குச் சென்று பார்வையிட்டோம். அப்போது எனது கணவர்தான் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதைக் கண்டோம். உடனடியாக நாங்கள் இராணுவ முகாமிற்குச் சென்றோம். அங்குள்ளவர்கள் எனது கணவன் முதல் நாள் காலை இராணுவ முகாமிற்கு வந்து போனபின் வரவில்லை என்று சொன்னார்கள். இராணுவத்தினரின் அனுமதியுடன் இறந்த எனது கணவரின் சடலத்தை வீட்டிற்குக் கொண்டு சென்றோம்.

இறந்தவரின் மனைவியின் தகப்பனார் திரு. சோமசுந்தரம், இறந்தவரின் மகள் ஆகியோரும் சாட்சியமளித்தனர். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

ஒரு குடும்பத்தில் ஒருவராவது வரவேண்டும்

"ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலிருந்தும் குறைந்தது ஒருவராவது விடுதலை இயக்கங்களில் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க போராடவேண்டும். அப்போது தான் அரசின் படைகளின் அட்டூழியங்களை முடிவுக்குகொண்டு வந்து எமது மக்களின் இலட்சியங்களை அடையமுடியும். தமிழ் மக்கள் இப்போது பெற்றுள்ள அரசியல் விழிப்புணர்ச்சியை முன்னரே பெற்றிருந்தால் எமது நோக்கம் எப்போதே நிறைவு பெற்றிருக்கும்" என நேற்று முன்தினம் கச்சேரியின் முன் மறியல் போரராட்டம் நடாத்தியவர்களின் மத்தியில் சிறிது நேரம் உரையாற்றிய ஈழ மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த டேவிற்சன் குறிப்பிட்டார்.

இளைஞர்களால்தெருக்கூத்து நிகழ்ச்சியும் அங்கு நடாத்தப்பட்டது.

பிறந்தநாள் வாழ்த்து

❋ கிளிநொச்சி கனகபுரம், சதாசிவம் மகேஸ்வரி தம்பதியின் மகள் கிருத்திகா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ கொழும்புத்துறை, யோகராசா சந்திரா தம்பதியின் மகன் யசோதரன் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ யாழ். பீச்ரோட், ஞானப்பிரகாசம் தம்பதியின் மகன் யூட்கிறேஸ்ரியன் இன்று தனது பதின்மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ நவாலி கிழக்கு, சுரேந்திரன் சந்திராதேவி தம்பதியின் மகள் சுகந்தினி இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

தொழில் கந்தோர் இடமாற்றம்

இதுவரை காலமும் வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கி வந்த யாழ். மாவட்டதொழில் கந்தோர் தற்பொழுது கஸ்தூரியார் வீதியிலுள்ள ஊழியர் சேமலாப நிதிக் கந்தோருக்கு அருகிலுள்ள பகுதிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

குணசேன மகாணம வேண்டுகோள்

புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தை அரச விகிதர் சேவைச் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமெனவும் கோரியுள்ளது.

இதற்கு எதிராக வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு நாளை நடத்தவுள்ள ஊர்வலத்தில் சகல மக்களும் கலந்து கொள்ள வேண்டுமெனவும் இதன் செயலாளர் குணசேன மகாணம கேட்டுள்ளார்.

வாகனங்கள் கடத்தலால் பால் விநியோகம் பாதிப்பு

எமது நிறுவனத்தின் வாகனம் கடத்திச் செல்லப்பட்டுள்ளதால் பால் உற்பத்தியிலும், விநியோகத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்பு 180 தொன் மாஸ் (பசு உணவு) உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் வாகனம் இல்லாமையினால் 40 தொன் மட்டுமே எம்மால் உற்பத்தி செய்யக்கூடியதாகவுள்ளது. எனவே கடத்திய வாகனத்தை மீள ஒப்படைத்து உதவவேண்டும்.

இவ்வாறு யாழ். அரசினர் வைத்தியசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையத் திறப்பு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கஇயக்குநர்சபைத் தலைவர் திரு. சி. சண்முகநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், முன்பு கிளிநொச்சிக்கு கொண்டு சென்றும் பால் விநியோகம் செய்யக்கூடியதாக விருந்தது. ஆனால் வாகனம் இல்லாமையால் இன்று அவ்வாறு செய்ய முடியாமலுள்ளது என்றார்.

வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் சீ. எஸ். நச்சினார்க்கினியன் பால் விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், பால் குடிப்பதன் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் வலியுறுத்தினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உரையாற்றுகையில், அபிவிருத்தி வேலைகளுக்கு பொது மக்கள் ஒத்துழைக்க வேணடுமெனக் கேட்டுக் கொண்டார்.

திட்டமிடல் பிரதி ஆணையாளர் திரு. சிவதாஸன் உரையாற்றுகையில், ஏற்கனவே ஐந்து விற்பனை நிலையங்கள் இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படுவது ஆறுவது நிலையமாகும். இவ்வருட இறுதிக்குள் பத்து விற்பனை நிலையங்கள் நிச்சயமாக ஆரம்பிக்கப்பட்டுவிடும் எனக் கூறினார்.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா முதலாவது கோப்பை பாலை வாங்கி விற்பனையை ஆரம்பித்தார்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

மரண அறிவித்தல்

ச. தம்பிராசா

தம்பிராசா, ச. காலமானார். இவர் செல்வராஜா (R M.P-R D H'S Office, Puttalam), சர்வானந்தன் (Survey Office, Jaffna), இராஜகோபால் (Agrarian Services, Batticaloa), புனிதவதி, அருளானந்தம், தேவராஜா, தவராஜா, தேவானந்தன் (Norway), சந்திரன் (Att rney-at-Law, Canada), புஸ்பராஜா (Italy), ஆகியோரின் தந்தையும், தேவராஜா (St Iohn's College, Jaffna), சுந்தரேசன், சந்திரகுமார் (Faculty of Medicine, Jaffna), ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள், 28-01-86 செவ்வாய்க்கிழமை, "திடல் வீதி' புலோலிகிழக்கு, பருத்தித்துறையில் நடைபெற்றது.

R/16394 தகவல்: த. செல்வராஜா.

இலங்கையின் முதல் ஒடியோ கிளப்

இலவச அங்கத்துவம்

நியூ விக்ரேஸ் ஒடியோ கிளப் அங்கத்தவராவதற்கு அறிமுகம், வைப்புப் பணம் வேண்டியதில்லை
இன்றே அங்கத்துவம் பெற்று பின்வரும் பாடல்களை ஒறிஜினல் மக்சல் கஸெட்டில் கேட்டுமகிழுங்கள்

- பக்திப் பாடல்கள்,
- புதிய பழைய சினிமாப் பாடல்கள்
- நாதஸ்வர, வாத்திய இசைகள்,
- பிறந்தநாள் திருமண பாடல்கள்,
- தத்துவ, சோகப் பாடல்கள்,
- டிஸ்கோ, ஆங்கில, இந்திப் பாடல்கள்,
- கதை வசனங்கள்,

வேண்டிய கசற்றை வேண்டிய நாட்களுக்கு கேட்டு ரசித்த பின் வாடகை
ஒரு கசற்றுக்கு ஒரு நாளுக்கு ரூபா 2/- மட்டுமே.
பாடல்கள் பதித்த ஒரிஜினல் மக்சல் கசற் விலை ரூபா 29.50
மேலதிக விபரங்களுக்கு நேரில்

நியூ விக்ரேஸ் ஒடியோ கிளப்
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532 பி/1037

REPAIR SERVICE
ரேடியோ, T.V மற்றும் மின் உபகரணங்களை நல்ல முறையில் திருத்த—
டைனமிக் என்ஜினியரிங் லிமிரெட்
476, பிரதான வீதி,
சுண்டுக்குளி. பி 1029

இவ்வாரத்துடன் ஆரம்பமான

புதிய பயிற்சி நெறிகள்

Diploma in Nursing – 27th Jan. 1986
(தாதிப் பயிற்சியில் டிப்பளோமா)
Diploma in Pharmacy – 5th Feb. 1986
(பாமஸி டிப்பளோமா)
Motor Machanisum – 3rd Feb. 1986
(மோட்டார் மெக்கானிசம்)
Motor Winding – 1st Feb. 1986
(மோட்டார் வைன்டிங்)
Radio T. V. – 27th Jan. 1986
(ரேடியோ T. V.)

உடன் தொடர்பு கொள்க

North Ceylon Technical Institute,
14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.
T. Phone: 24355 R/16390

88 AUGUST

A/L வகுப்புக்கள் ஆரம்பம்
1-02-86 சனிக்கிழமை காலை 11-30 மணி
விபரங்கட்கு:-
New Master Institute
BMC Lane, Jaffna. R / 16386

வித்தியாலய அதிபர் அறிவுரை

இறைவழிபாடு இன்னலகற்றி இன்ப வாழ்வுக்கு வழிகோலும்

(சுண்டுக்குளி)

"இறைவன் திருநாமமே அச்சத்தைப் போக்க வல்லது. கூட்டு வழிபாட்டினால் துயர்கள் யாவும் அகலுவதுடன் மனதில் தீய எண்ணங்கள் நீங்கி நல்ல எண்ணங்கள் ஏற்படும். நாம் எல்லோரும் ஒற்றுமையாகக் கூட்டு வழிபாட்டில் ஈடுபடும் போது போட்டி, பொறாமை, சுய நலம் வேற்றுமையாவும் மறைந்து பரந்த மனப்பான்மையும் பொதுநல நோக்கும் ஏற்படும். மக்கள் மனச்சாந்தி பெறுவதற்குக் கூட்டு வழிபாடு சிறந்த மருந்தாகும்"

இவ்வாறு வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் கொழும்புத்துறை மேழக்கு சட்டம்பித்துறை விசாகப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற பஜனை கூட்டுப் பிரார்த்தனையில் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்டார். ஆலயப் பொறுப்பாளரும், பூசகருமான திரு. க. மகேந்திரம் விசேட பூசை ஆராதனைகளை நடாத்தினார்.

திரு கணேசதாசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "இன்றைய சூழ்நிலையில் ஆலயங்களே எமக்குத் தஞ்சமளிக்கின்றன. இறைவழிபாடு பக்தியின் மூலமே எமது இன்னல்களுக்கு விடிவுகாண முடியும். பாடசாலைகளில் சமய பாடம் முக்கிய பாடமாக்கப்பட்டிருப்பதற்கு இதுவே கரரணம். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த சமயக் கல்வியை ஊட்டுவதுடன். கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுத்தி ஊக்குவிக்க வேண்டும்"

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயற்குழு உறுப்பினர் திரு. சி. சி. வரதராசா இக் கூட்டுப் பிரார்த்தனைக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், "இளம் சிறார்கள் மத்தியில் சமயப் பற்று வேரூன்ற வேண்டும். பெற்றோரையும், தமது குடும்பத்தையும், வயது முதிர்ந்தவர்களையும் மதிக்கப் பழக வேண்டும். சிறு வயதிலிருந்தே சமய அனுஷ்டான விதி முறைகளைக் கடைப்பிடித்து வருவதன் மூலம் எதிர்காலத்தில் ஒளிமயமான வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறினார்.

சில்லறைக் கடையில் இருவர் செய்த சின்னத் தனம்!

(அரியாலை)

பல ரூபா பெறுமதியான சவர்க்காரக் கட்டிகள், சிகரட் பெட்டிகளுடன் இரு நீளக் காற்சட்டை ஆசாமிகள், கடைச் சொந்தக்காரருக்குப் பணத்தையும் கொடுக்காமல் மறைந்து விட்டார்கள். இச் சம்பவம் அல்வாய் தெற்கில் மு. கனகசிங்கம் என்பவருக்குச் சொந்தமானசில்லறைக் கடையில் நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவம் பற்றித் தெரிய வந்ததாவது:-கடந்த 21ம்திகதி இரவு ஏழு மணியளவில் பிரஸ்தாப இருவரும் கடைச் சொந்தக்காரரிடம் பல பொருட்களை டசின் கணக்காகப் பார்சல் செய்து தரும்படி கேட்டார்களாம். சில்லறைக் கடையில் இவ்விதம் கொடுக்க முடியாது என உரிமையாளா மறுத்து விட்டுச் சவர்க்காரக் கட்டிகள், சிகரட் பெட்டிகள் என்பனவற்றைப் பெரிதாகப் பார்சல் செய்து கொடுத்தார் பார்சல்களை வாங்கிய ஒருவர் பணத்தை எடுப்பதாகச்சென்று சைக்கிளுடன் ஆயத்தமாக நின்ற இன்னொரு ஆசாமியுடன் மறைந்து விட்டார்.

இச்சம்பவத்தை அறிந்து மக்கள் கூடிய போதும் சம்பந்தப்பட்டவர்களைப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் செருப்புகளையும், சில சவர்க்காரக் கட்டிகளையும் போட்டு விட்டு ஓட்டம் பிடித்தார்களாம்.

விநாயகர் உற்சவம்

(வல்வெட்டித்துறை)

உடுப்பிட்டி - இமையாணன் தும்பவாழி வீரகத்தி விநாயகர் அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது.

உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணி முதல் நெடியகாடு திரு. அ. கணேசமூர்த்தியினால் "பிள்ளையார் பெருமை" பற்றி விரிவுரை யாற்றினார்.

சமாதானம் மலர்ந்தது

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டிக் கடலில் தொழில் செய்வது சம்பந்தமாக ஞானிமடம் மீனவருக்கும் நல்லூர் மீனவருக்கும் நீண்டகாலமாக நிலவிவந்த பிரச்சனை மட்டுவில்நாடு இணக்க சபைக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இரு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இணக்க சபைத் தலைவர் திரு. ச.ஆ. சதாசிவமும் ஏனைய இரு பிரதிநிதிகளும் தொழில் செய்யும்கடற்பிராந்தியத்துக்குச் சென்றுபார்வையிட்டு அவர்களுக்குரிய பகுதிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு பகுதியினரும் சமாதானமாகத் தொழில் செய்து வருகின்றனர்.

'தமிழர்நிலை உணர்ந்து 'தஹா' பேசியது பாராட்டுக்குரியது'

(சாவகச்சேரி)

"ஜனநாயகத்தில் நம்பிக்கையும், துணிச்சலும், நீதியும், புத்த மதக் கோட்பாட்டின் அறவழியைப் பேணி நடப்பவரும், சகோதரத்துவப் பண்பும், உயர்ந்த உள்ளமும் கொண்டவருமான, சிங்களச் சகோதரர்களும் உண்டு. இவர்களில் காலி எம். பி. டாக்டர் தஹநாயகாவும் ஒருவர். அவர் தார்மிகப் பண்புள்ள ஒரு தனிப் பெரும் அரசியல்வாதி, அரசியல் தலைவன் என்றால் மிகையாகாது."

இவ்வாறு சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரும், சைவப் பிரமுகருமான திரு. கே. கே. ஐயாத்துரை, சைவ வட்டப் பிரார்த்தனைக் கூட்டமொன்றில் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், 'டாக்டர் டபிள்யூ. தஹநாயகா பாராளுமன்றத்தில் தமிழர் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்துவைக்க வேண்டும் என்று துணிச்சலுடன் குரல் எழுப்பினார். அதுவும் தார்மிகத்தின் பின்னணியில் அவரின் குரல் முழங்கியது. சகல உரிமைகளோடும் தமிழ்ச் சகோதரர்களுக்கு மாகாண சுயாட்சியைக் கொடுப்பது ஒரேயொரு சிறந்த வழி என்பதையும் தெளிவுபடுத்தினார். இந்தியா-ரஷ்யா போன்ற நாடுகளையும் உவமை காட்டினார். இதன் மூலம் புத்த பிரான் போதனைகளில் நம்பிக்கையுள்ள சிங்கள சகோதரர்களிடையே புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளார்.

ஜனநாயக ஆட்சியில் புத்த மதத்தின் தார்மிகக் கொள்கையின் அடிப்படைத் தத்துவம் போதிப்பது மற்றவர் மனம் நோகவோ, வருந்தவோ கூடாது என்பதுதான். அது மட்டுமல்ல தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்ததும் இந்த அரசுக்குத்தான் என்பதையும் தெளிவுபடுத்தினார் டாக்டர் தஹநாயகா" என்றார்.

இவ்வுரை ஒரு கடித ரூபத்தில் பலரின் கைச்சாத்துடன் டாக்டர் தஹநாயகாவுக்கு ஓர் பாராட்டுக் கடிதமாக அனுப்பி வைக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி

புதிய அதிபரின் தலைமையில் மேலும் மேன்மை பெறும்

(சரசாலை)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற மரம்நாட்டு விழா, கல்லூரி அதிபர் திரு. குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி விழாவிற்குப் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அங்கு உரையாற்றுகையில் "யாழ். இந்துக் கல்லூரியில் உயிரியல் தாவரவியல் பாடத்தை போதித்து அக்கல்லூரியின் பெயரை வளர்த்த ஆசிரியர் திரு. குகதாசன் இக்கல்லூரிக்கு அதிபராக கிடைத்தமை தென்மராட்சி மக்கள் செய்த பெரும் பேறாகும். இவர் மூலம் இக்கல்லூரி மாணவர்கள் நற்பலன்களை பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இப்படியான வைபவங்கள் பெற்றாருக்கும் நலன்விரும்பிகளுக்கும் பாடசாலைகளுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துகின்றது. எங்கள் மக்கள் வருடம் முழுவதும் பாடசாலையோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், தொழிற்கூடம் என்பன விளங்குகின்றன" என்றார்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன், டாக்டர் பிலிப் ஆசிரியர், திரு. க.சந்திரசேகரம் உட்பட பலர் உரையாற்றினர், கல்லூரி முன்னாள் அதிபர் திரு.க. மகேஸ்வரனும் கலந்துகொண்டார்

கட்டுவன்புலம் வித்தியாலய விரிவுக்கு மேலதிக நிதி

(வயாவிளான்)

கட்டுவன்புலம் மகா வித்தியாலய மேல் மாடிக் கட்டடத்தின் தொடர் வேலைக்காக இவ்வருடமும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக மழை ஒழுகக்கூடிய தற்காலிக கொட்டில்களில் இயங்கி வந்த சில வகுப்புக்களை இக்கட்டடத்தினுள் வைத்து ஓரளவாவது இடப்பிரச்சினையைத் தீர்த்து கொள்ள முடியுமென பாடசாலை அபிவிருத்திச்சபையின் பொருளாளர் திரு. பீ. நாகரத்தினம் தெரிவித்தார்.

அதிபர் திரு க. இராசதுரையினது தீவிர முயற்சியினாலும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரத்தினது சிபார்சினாலும், கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளையினது அங்கீகரிப்பாலும் இப்பணம் ஒதுக்கப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்தார்.

மூன்றுமிடம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் கடந்த வருடம் திறமையாக இயங்கிய உள்ளூராட்சி, நகர சபைகளைத் தெரிவு செய்யும் போட்டியில் யாழ். மாநகர சபை மூன்றுமிடத்தைப் பெற்றுள்ளது.

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட இப்போட்டியில் அம்பலாங்கொடை நகர சபை முதலாமிடத்தையும் வெலிகம நகர சபை இரண்டாமிடத்தையும் பெற்றன.

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி சறோஜினிதேவி ஜெகநாதன்

மலர்வு 29-10-1954 உதிர்வு 30-12-1985

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கடித்து மீளாத் துயில் கொண்டு இறைவன் திருப்பாதம் சேர்ந்த எம் அன்புத் தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் இதய அஞ்சலிகள்.

கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்,
மாமா, மாமி

பிரம்படி லேன்,
கொக்குவில்.

R16375

தொழிற் பயிற்சி

- ரெலிவிசன், வீடியோ டெக், றிப்பியறிங்
  இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
- Computer Programming
  40 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
- HOTEL MANAGEMENT
- FRENCH & GERMAN
- எலக்ரிக்கல் வயறிங்

பயிற்சிகள் ஆரம்பம்: 01.02.86

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கரியருகாமை) சாவகச்சேரி.

நெல்லியடி, கரவெட்டி.

வங்களாவடி, வேலணை.

R/16385

உதய சிந்தனை
இதய ஒற்றுமைதான் தேவை ஒட்டுப்போட்ட ஒற்றுமை அல்ல.
...மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

இதய ஒலி

29-1-86 புதன்கிழமை (தரோதன) தை-16

அவர் மனநோயாளி? நம்ப வைக்க முயற்சி

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நடைபெற்ற பட்டப்பகல் படுகொலைகள் அண்மைக் காலச் சம்பவங்களில் மிக முக்கியமானதொன்றாகும்.

1984ம் ஆண்டில் பஸ்ஸில் பயணம் செய்த தமிழர்களை வவுனியாவில் இறக்கி, காட்டுக்குள் அழைத்துச் சென்று வரிசையில் நிறுத்தி வைத்து நடத்தப்பட்ட கொலைகளை மறந்து விட முடியாது.

கடந்த வருடம் அனுராதபுரத்திலுள்ள ராணுவ முகாமுக்குள் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் மக்களை நாய்களைச் சுடுவதிலும் பார்க்கக் கேவலமாக ஒரு ராணுவ கோப்ரல் கண்மூடித் திறப்பதற்குள் சுட்டுக்கொன்ற அட்டூழியத்தை மறந்துவிட முடியாது.

இவ்வாறான ஒரு செயலாக, அல்லது அதனிலும் மோசமான ஒரு ஈனச் செயலாகவே கிளிநொச்சிச் சூட்டுச் சம்பவத்தை அனைவரும் கருதுகின்றனர்.

இச் சம்பவம் நடைபெற்ற இடமும், கொல்லப்பட்டவர்கள் பயணிகளாகவும் இருந்ததால், இங்கு மரணமானவர்களையும் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்றும் வர்ணிக்கமுடியாத நிலை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டது துரதிர்ஷ்டவசமானதாகும்.

உலகப் பத்திரிகைகள், வானொலிகள் அனைத்தும் "தமிழ்ப் பிரயாணிகள் பத்துப்பேர் ராணுவத்தால் சுட்டுக் கொலை" என்று பறைசாற்றி விட்டதால், இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கலாமெனக் கருதுகின்றோம்.

ஆனாலும் அரசாங்க ஊதுகுழலான இலங்கை வானொலி, இதில் சம்பந்தப்பட்ட ராணுவச் சிப்பாய் ஒருவர் கைதானதையடுத்து, அவரை ஒரு மனநோயாளி எனப் படம் பிடித்துக் காட்டும் வகையில், தனது சொற் சிலம்பங்களால் வர்ணனை செய்ததுவே எமக்குச் சிரிப்பை யுண்டு பண்ணுகின்றது.

"இலங்கை வானொலி" தனியார் நிறுவனமல்ல. அரசாங்கத்தின் பிரதான பிரச்சாரசாதனம். எதனையுமே அறுதியாக, உறுதியாகக் கூறுவதுதான் வானொலியின் பணி.

ஆனால் இச்சம்பவம் பற்றிய செய்தியில், "அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன;" "என்றுகூறப்படுகின்றது;" "எனத் தெரிவிக்கப்பட்டது" என்ற சொற்பதங்களின் மூலம்தான் தெரிவித்த விபரங்கள் உண்மையற்றவை: ஊர்ஜிதமற்றவை; நம்பத்தகுந்தவையல்ல என்ற எண்ணத்தை ஏற்படுத்தியமைக்காக, இச் செய்தியைத் தயாரித்த "ஜாம்பவானுக்கு" அனைவரும் நன்றி கூறக்கடமைப்பட்டவர்கள்.

இந்தச் செய்தியறிக்கையில் நாம் கவனத்துக்கு எடுக்க வேண்டிய விடயங்கள் பலவுண்டு.

பத்துப் படுகொலைகளையும் செய்தவர் ஒரு ராணுவச் சிப்பாய் தானா? ஏனெனில் கைதானவர் ஒருவர் மட்டும்தான்!

இந்தச் சிப்பாய் "தற்காலிகமாக நிலைதடுமாறி, ஆவேசம் கொண்டு தன்னிடமிருந்த துப்பாக்கியால், ரயில் நிலையத்தை நோக்கிச் சுட்டதாக" இச் செய்தி கூறுகின்றது.

கவனமாகப் படியுங்கள்! அவர் நிலைதடுமாறியது தற்காலிகமாக; அவர் சுட்டது ரயில் நிலையத்தை நோக்கி; அதாவது, பயணிகளை நோக்கியல்ல சிரிப்பு வரவில்லை?

ஆனால் இறந்தது பத்துப்பேர்; காயம் பதினாறு பேர்.

இங்குகூட காயமடைந்தவர்கள் ஏழு பேர் என்று வானொலி தெரிவிக்கின்றது. ஆஸ்பத்திரிகள் உண்மை நிலையைக் கூறும்.

இத்துடன் நின்றுவிடவில்லை வானொலி,

"சம்பந்தப்பட்ட படைவீரரை, சகவீரர்கள் மடக்கிப்பிடித்து, அவரது துப்பாக்கியை அபகரித்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது" என்றும் அந்தச் செய்தி தெரிவிக்கின்றது

ஆனால், இப்படியாக எதுவுமே நடைபெற்றதை, அங்கு நின்றவர்கள், காயமடைந்தவர்கள் எவருமே காணவில்லை, பொதுமக்களில் இதற்குச் சாட்சி கிடையாது.

"துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற பின்னரும் பல மணித்தியாலமாக குறிப்பிட்ட சிப்பாய் சுயநினைவிழந்திருந்தார் எனக் கூறப்படுகின்றது. அவர் நடுங்கிக் கொண்டும், தம்மைச் சூழ்ந்து பயங்கரவாதிகள் நிற்பதாகப் பிதற்றிக் கொண்டும் கூச்சலிட்டதாக தெரிவிக்கப்பட்டது" என்றும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது

பத்துக் கொலைகளைச் சில நிமிடங்களில் செய்த ஒருவர், பின்னர் சுயநினைவிழக்காமல் இருந்திருக்க முடியாது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் கொலைகளைச் செய்வதற்கு முன்னரும், செய்யும் போதும் நினைவிழந்திருந்தாரா என்பது தான் கேள்வி!

தம்மைச் சுற்றிப் பயங்கரவாதிகள் இருப்பதாக அவர் பிதற்றியதும் உண்மையாகவிருக்கலாம். ஏனெனில் அருகில் நின்றவர்கள் அவரது சக பாடிகள். அரச பயங்கரவாதத்தின் நாயகர்கள்.

ராணுவம் சுட்டால் அவர் மனநோயாளி; தமிழன் தன்னைப் பாதுகாக்கச் சுட்டால் அவர் பயங்கரவாதி.

இலங்கை ஜனநாயகத்தின் புதிய சித்தாந்தம் இது அருமை! அருமை!

இன்று நடைபெறும் தமிழ்மக்களின்

ஆயுதப் போராட்டத்துக்கு இனப்பிரச்சினையே காரணம்

ஊர்காவற்றுறை மக்கள் அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

"தாங்களும் தங்களுடைய தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் தற்பொழுது நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சிப்பதாகக் கூறிவரும் அதேவேளையில், ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தைநசுக்குவதற்கு இராணுவ நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிவருகின்றீர்கள். ஆனால் ஆயுதப்போராட்டத்திற்கு அடிப்படைக் காரணமே இனப்பிரச்சினை என்பதாகும். எனவே இனப்பிரச்சினையிலிருந்து ஆயுதப்போராட்டத்தை பிரித்து நோக்குவது எமக்கு புரியாத புதிராகவே இருக்கின்றது. எனவே ஆயுதப் போராட்டத்தை அழித்தொழிக்கும் தங்களின் முயற்சிகள் காரணமாக தமிழ் மக்களின் உயிர், உடமைகளுக்கு ஏற்படும் இழப்புக்கள்பற்றி தாங்கள் சிறிதேனும் அக்கறை காட்டாமல் பல இன்னல்களையும் ஏற்படுத்தி வந்துள்ளீர்கள்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு ஊர்காவற்றுறை மக்கள் ஸ்தாபனங்களின் இணைப்புக்குழு அமைப்பாளர்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 'அண்மையில் கொண்டு வரப்பட்ட பாதுகாப்பு வலயப் பிரகடனமும் அது போன்று எதிர்காலத்தில் கொண்டு வரப்படவிருக்கும் ஏனைய அடக்கு முறைச் சட்டங்களும் சாத்வீக வழியில் நம்பிக்கை கொண்டுள்ள தமிழ் மக்களை ஆயுதப் போராட்டத்திற்கு இட்டுச்செல்லுமேயன்றி அவர்களுக்கு மாற்றுவழி வேறொன்றுமிராது. எனவே தாங்கள் ஓர் முடிவற்ற யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணர்வீர்களென்று நம்புகின்றோம். இந்தப் பயனற்ற அர்த்தமற்ற முயற்சியை கைவிடுவீர்களென்று எதிர்பார்க்கின்றோம்.

ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் ஏற்கனவே காரைநகர் கடற்படை முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் பீரங்கித் தாக்குதல்களாலும், பண்ணை நுழைவாயிலில்நடாத்தப்படும் கொலைகளாலும் பீதியடைந்துள்ளார்கள். எனவே தங்களுடைய புதிய அச்சுறுத்தல் நாம் தற்சமயம் வாழ்ந்துவரும் சூழ்நிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தாது இருப்பினும் தங்களால் வழங்கப்படும் புதிய அதிகாரத்தின் கீழ் கனரக ஆயுதங்களை பாவிப்பதன் மூலம் ஏற்கனவே கட்டுப்பாடின்றி செயல்படும். இராணுவம் தனது படுகொலைகளை மேலும் பன்மடங்காக்கும். எனவே பாதுகாப்பு வலய சட்டத்தையும், இராணுவத்தையும் தமிழ் பகுதிகளிலிருந்து அகற்றுமாறு கோருகின்றோம்."

இதன் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபருக்கும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சுதுமலை பிரஜைகள் குழு கேட்கிறது

நோயைத் தீர்க்காமல் நோயாளியை கொல்வதா?

"தமிழ் மக்கள் அரசையோ, படையினரையோ எதிர்த்துப் போராடவில்லை. யுத்த காலங்களில் எதிரிகளைத் தாக்கவே பீரங்கி போன்ற பாரிய பயங்கர ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன. விமானத் தாக்குதல்களும் எதிரிகளைத் தாக்கவே பயன்படுத்தப்பட்டன. குடிசனமில்லாத வெளியான இடங்களிலேயே உலகநாடுகளில் முகாம்கள் உள்ளன. ஆனால் இங்கு மக்கள் நிறைந்து வாழும் பகுதிகளில் பாதுகாப்புப் படை முகாம்கள் அமைக்கப்பட்டு அவை பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்தப்படுகின்றன." இவ்வாறு சுதுமலை பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

"யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் முகாமிலிருந்து முக்கால் மைல் தூரத்துக்குள்ளேயே நகரத்தின் முக்கியமான, அத்தியாவசியமான அமைப்புக்கள் உள்ளன. அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்கள் நிறைந்து வாழும் பகுதிகளும் இப்பகுதியினுள்ளேயே அமைந்துள்ளன அரசு அறிவித்துள்ள எல்லையைத் தாண்டி பாதுகாப்புப்படையினர் அப்பால் போக மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. எனவே நோயைத் தீர்ப்பதற்கு பதில் நோயாளியைக் கொல்லாமல் பாதுகாப்புப் படையினரை அகற்றி தமிழ் மக்களின் உயிரையும், உடமையையும் காப்பாற்றுமாறும், பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்குமாறும், கேட்டுக் கொள்கின்றோம்" எனவும் இம் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"விமானங்கள் மீண்டும் வரும்" வெளியீட்டு விழாவில் பாராட்டு

மத்திய கிழக்கின் நம்மவரின் வாழ்வியலை பேரன் தத்ரூபமாக படம்பிடித்துள்ளார்

(கரவெட்டி)

"யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் ஒரு காலத்தில் கொழும்பு மணியோடரில் தங்கியிருந்தது. ஆனால் இன்று மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் டிரூவ்ட்டுகளில் தங்கியுள்ளது. மத்திய கிழக்கில் எமது வாலிபர்கள் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் பணத்தை இங்கு சில மனைவிமாரும் உறவினர்களும் ஊதாரித்தனமாகச் செலவிட்டுச் சீரழிக்கிறார்கள். இவற்றை நெல்லை க. பேரன் தமது 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற குறுநாவலில் மிகவும் சிறப்பாகச் சித்தரித்துள்ளார். இவரது எழுத்துக்களை நான் படிக்கும் காலத்தில் இருந்தே அறிவேன். மக்களுக்காக எழுதி மக்களிடம் அன்பு காட்டி வாழும் பண்புள்ள எழுத்தாளர் இவர். இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவாக யாழ் இலக்கிய வட்டம் பல்வேறு பத்திரிகை நிறுவனங்களுடன் இணைந்து வருடந்தோறும் இலக்கியப் போட்டிகளை நடாத்துவது பாராட்டிற்குரியது. அத்தகைய ஒரு போட்டியிலே முதற் பரிசு பெற்ற இந்த நாவல் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும்"

இவ்வாறு நெல்லை க. பேரனின் "விமானங்கள் மீண்டும் வரும்" குறுநாவல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் கூறினார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராசலிங்கம் மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

ஆசியுரையும் வெளியீட்டுரையும் நிகழ்த்திய வைத்திய கலாநிதி எம் கே. முருகானந்தன் பேசுகையில், "இலக்கியம் மக்களுக்காகப் படைக்கப்படவேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன் மத்திய கிழக்கில் எமது வாழ்க்கை முறையையும் பிரச்சனைகளையும் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்துதமது திறமையினால் நாவலாக வெளிக்கொணர்ந்த பேரன்பாராட்டிற்குரியவர். இங்கு எழுத்தாளர்களின் நூல்களை அச்சிட்டு வெளியிடும் நிறுவனங்கள் மிகவும் குறைவு. இல்லையென்றே சொல்லலாம். அத்தகைய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு எமது நாட்டின் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் கொடுக்க முன்வர வேண்டும். பிரச்சனையான இன்றைய காலத்தில் பேரன் தமது சொந்த முயற்சியில் இந்த நூலை வெளியிட்டமை மெச்சத்தக்கது. பரிசு பெற்ற இக்கதை எம் அனைவரதும் வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது என்பதால் நல்ல வரவேற்பைப் பெறும்" என்றார்.

எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகன் பேசுகையில், மத்திய கிழக்கு வாழ்வியலை மிகவும் அனாயாசமாகப் படம் பிடித்துக் காட்டும் இந்த நாவல் நண்பர் பேரனுக்கு பெரு வெற்றி எனலாம். இத்தகைய புதிய களத்தில் மிகவும் உயிரோட்டமான கதாபாத்திரங்களை வெகு அழகாகக் கையாண்டுள்ள பேரன் மண்வாசனை கமழவும் இதனை எழுதியுள்ளார். கொழும்பில் வாழ்ந்த காலத்தில் பேரன் நடாத்திய இலக்கியச் சந்திப்புக்கள், சர்ச்சைகளை நாம் இலகுவில் மறக்கமுடியாது. உண்மையான இலக்கிய அபிமானியான அவரது இந்த நாவலை நான் பெரிதும் வரவேற்பதுடன் உங்களுக்கு அறிமுகம் செய்வதிலும் பெருமைப்படுகிறேன்" என்றார்.

திரு. செ. யோகராசா பேசுகையில், "ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பொதுவாக தமிழ் நாவல் வரலாற்றிலும் மத்திய கிழக்கு வாழ்வின் வெட்டுமுகத்தைத் திறம்படச் சித்தரிக்கும் முதல் நாவல் என்பதால் இதற்கு நிச்சயம் இடம்உண்டு. சிறு சிறு காட்சிகள் மூலமும் நுட்பமான தகவல்கள் மூலமும் கதையை நகர்த்திச் செல்லும் இந்த நாவலின் தலைப்பான 'விமானங்கள் மீண்டும்' என்பதே கவிதைபோன்ற ஒன்றாகும். எழுத்தாளனின் சொந்த அனுபவங்களும் யாழ்ப்பாண மண்ணின் இளைஞர்

– 5ம் பக்கம் பார்க்க

பிரிட்டிஷ் ஆளும் கட்சி மீதான

நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி அடைந்தது!

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்க்கிரட் தட்சர் சமீப கால சம்பவங்களில் தான் தவறிழைக்கவில்லை எனக் கூறி தன் பலத்தை மீண்டும் பாராளுமன்றத்தில் நிலைநாட்டிக் கொண்டுள்ளார்.

ஆளும் கொன்ஸர்வேடிவ் கட்சிக்கு எதிராகத் தொழிற் கட்சியால் கொண்டுவரப் பட்ட தீர்மானத்திற்கு எதிராக 379 வாக்குகளும் ஆதரவாக 219 வாக்குகளும் கிடைத்தன.

இதன் மூலம் இத்தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது.

சில மந்திரிகளின் ராஜினாமாவை யடுத்து அரசில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

தேசிய எதிர்ப்பு ராணுவ நடவடிக்கை கம்பாலாவில் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

(கம்பாலா)

உகண்டாத் தலைநகர் கம்பாலா கிளர்ச்சிப் படைகளால் (தேசிய எதிர்ப்பு இராணுவம்) கைப்பற்றப்பட்டதனை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர் என அறிவிக்கப்படுகிறது.

ஒருவார சண்டை ஓய்ந்து இந்நிலை உருவானதையடுத்து ஆயிரக் கணக்கான மக்கள் கம்பாலாவைச் சுற்றியுள்ள தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கம்பாலாவுக்கு எண்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஜிஞ்சா என்ற முக்கிய நகரும் கிளர்ச்சியாளர் வசமுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

விரைவில் நாடு பூராவும் தப் கட்டுப் பாட்டுக்குள் வந்து விடும் என்று கிளர்ச்சிப்படைகளின் தலைவர் அறிவித்துள்ளன.

கிளர்ச்சியாளரிடம் ஏழாயிரம் அரசு துருப்புகள் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில துருப்புகள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனராம்.

திருச்சியில் திகில் சம்பவம்

பழைய பகைமை எதிரொலி 14 பேர் எரித்துப் படுகொலை

(திருச்சி)

திருச்சி மாவட்டக் கிராமம் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த பதினான்கு பேர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட திகில் சம்பவம் ஒன்று குறித்து அறிவிக்கப்படுகிறது.

இதில் ஐந்து பெண்களும் அடங்குவர். காயமடைந்த பதினான்கு வயதுச் சிறுமி ஒருத்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையாச்சி என்பவருக்கு மற்றொருவருடன் உண்டான பகைமையின் எதிரொலியாக இருநூறு பேர் கொண்ட கும்பல் ஒன்று ஆயுதங்கள் சகிதம் வந்து குறிப்பிட்ட வீட்டைத் தீ மூட்டி எரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு பிரச்சினை பற்றி

ஜோர்தான் ப. வி. ஸ்தாபன தலைவர்கள் சந்தித்தனர்

(அம்மான்)

ஜோர்தான் மன்னர் ஹுசெயினும் பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவர் யசீர் அரபாத்தும் நேற்று இங்கு சந்தித்து பேசினார்கள். இவர்கள் மத்திய கிழக்கு பிரச்சினைகள், யோர்தான் பலஸ்தீன உறவுகள் பற்றி ஆராய்ந்தனர்.

அண்மைக் காலங்களில் இஸ்ரேல் சில இடங்களில் நடாத்திய தாக்குதல்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேசினார்கள்.

பாப்பரசரின் சென்னை நிகழ்ச்சி

வத்திக்கான் வானொலியும் அஞ்சல் செய்ய ஏற்பாடு

(சென்னை)

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் சென்னை மெரீனா கடற்கரையில் நிகழ்த்தவுள்ள பிரார்த்தனை உரையை வத்திக்கான் வானொலி நிலையம் அஞ்சல் செய்யவுள்ளது.

இதன் பொருட்டு கோவாவில் தற்காலிக வானொலிநிலையம் ஒன்று அமைக்கப்படடுள்ளது.

ஆங்கிலத்தில் நிகழவுள்ள இப்பிரார்த்தனையை அகில இந்திய வானொலியும் அஞ்சல் செய்யும்.

மத்திய...

...4 ம் பக்கத் தொடர்

களின் சராசரி உண்மைக்கதையும் என்பதால் இந்த நாவல் மிகவும் வலிமை பெற்றுப் படைப்புத்தன்மையில் வெற்றி பெற்றுள்ளது'' என்றார்.

திரு, தெணியான் பேசுகையில் "இலக்கியக் கூட்டத்திற்கு இவ்வளவு திரளாக மக்கள் வந்திருப்பது மகிழ்வுக்குரியது. 'பேரன்' என்ற மனிதனை இவ்வூர் மக்கள் எவ்வளவு தூரம் கௌரவிக்கிறார்கள் என்பதற்கும், இங்கு மக்கள் எவ்வளவு கலை, இலக்கிய ஆர்வலர்களாக இருக்கிறார்கள் என்பதற்கும் இது சாட்சி. மத்திய கிழக்கு நாடுகளில் எமது இளைஞர்கள் வாழும் சுதந்திரமான வாழ்வு முறை முதல் விமான அனுபவங்கள் தொழில் ரீதியான கஷ்டங்கள் யாழ்ப்பாண உறவு முறை என்று பல விடயங்கள் இந்நாவலில் ஆராயப்படுகின்றன. பேரனின் உண்மை அனுபவ வெளிப்பாடுதான் இந்த நாவல்'' என்றார்.

ஆசிரியர் திரு. க' சிதம்பரப் பிள்ளை பேசுகையில் "உரையாடல் இந்த நாவலில் அதிகம் இடம் பெற்றிருக்கலாம்''. என்றார்.

செல்வி சந்திரா தியாகராசாவும் இந்த நாவலை விமர்ச்சித்துப் பேசினார். நெல்லை க. பேரன் பதிலுரையின் போது எமது கலையும் இலக்கியமும் வளர்ந்தாற்றான் எமது பாரம்பரியத்தைக் காப்பாற்ற முடியும் என்றார்.

கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனின் கலை நிகழ்ச்கியும் இடம் பெற்றது,

செல்வி மாலதி கதிர்காமத் தம்பி நன்றி கூறினார்.

தென்னாபிரிக்கா அரசு மீது

சர்வதேச பொது மன்னிப்பு சபையும் கடும் கண்டனம்

(லண்டன்)

தென்னாபிரிக்கப் பிரிட்டோரியா அரசுமேற்கொள்ளும் இன வெறி நடவடிக்கைகளை சர்வதேச பொது மன்னிப்புச் சபை பொதுகண்டனம் செய்துள்ளது

இங்கு சில வருடங்களில் பிரிட்டோரியா இனவெறி அரசு வெள்ளையர் அல்லாது இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் பேரை கைது செய்ததுடன் அவ்வப்போது அடித்து, அவமானப் படுத்தியுமுள்ளதாகவும் இச்சபை தெரிவித்துள்ளது.

1984 இல் 131 பேர் தூக்கிலிடப்பட்டனர். இவர்களில் 115 பேருக்கு பிரிட்டோரியா சிறைக் கூடத்தில் இது நிறைவேற்றப்பட்டது. அவர்களில் ஒரு பெண், இரு வெள்ளையர், ஒரு ஆசிய நாட்டவர் அடங்குவர். ஏனையோர் கறுப்பு இனத்தவர்கள் என்றும் இச்சபை தெரிவித்துள்ளது.

ஒரு பாதுகாப்பு அதிகாரி சிறைக்கைதியை சுட்டுக் கொன்றதற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டும் தண்டனை நிறைவேறவில்லை எனவும் அதில் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் தேர்தல் அடுத்த சில மாதங்களில்?

அடுத்த மூன்று மாதங்களுக்குள் பங்களாதேஷில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று பங்களாதேஷ் பொதுப் பணித்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வறிவிப்பை விடுத்தார்.

திடீர் ராஜினாமா

(புதுடில்லி)

இந்தியாவின் மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் மற்றுமொரு உயரதிகாரியும் திடீரென ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தாய்வானுடன் தொடர்புள்ள உளவறியும் கோஷ்டியுடன் சம்பந்தப்பட்டவர்கள் என பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

உணவு மற்றும் பொருட்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கே. கே. சிவ்டியோ, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பன்முலால் சந்திரகார், இந்திய எலக்ட்ரோனிக் ஆணைக் குழுவின் தலைவர் திருராணி ஜீவாரா ஆகியோர் ராஜினாமாச்செய்துள்ளதாக பி. ரி. ஐ. தெரிவித்துள்ளது.

உறுப்பினர் தெரிவு

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தன் 13ம் இலக்க கிளைக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவுகள் அண்மையில் நடைபெற்றன. ஒன்பது உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட இத் தேர்தலில் பதினெட்டு உறுப்பினர்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்திருந்தனர். தேர்தல் நடைபெற்ற சமயம் எட்டு உறுப்பினர்கள் தலா ஒவ்வொரு வாக்குகளைப்பெற்று தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு: எஸ் பேரம்பலம், ஏ. பாலசுப்பிரமணியம், எஸ். இராமநாதன், எஸ். வரதராஜேஸ்வரமுதலி, எஸ். காசிநாதன், ஆர். இராஜலிங்கம், எஸ். சிவகுருநாதபிள்ளை, ஆர். செல்வநாதன்.

ஈழமுரசு

புல்லுமலைக்குள் வெளியிடத்தவர் புகாமல் தடுக்குமாறு முயற்சி

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய இடங்களுக்கு நேற்று விஜயம் செய்து பந்தோபஸ்து நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார். பாதுகாப்பு படைகளின் முக்கிய அதிகாரிகளையும், பொதுமக்களையும் அமைச்சர் சந்தித்துப் பேசினார். பெரியபுல்லுமலை என்ற கிராமத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் வெளியில் உள்ளவர்கள் இக்கிராமங்களுக்குள் வராமல் பொதுமக்கள் பாதுகாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

பாடசாலைகள், கடைகள் மூடப்பட்டன:

புளியங்கூடலிலிருந்து ஊர்காவற்றுறை வரை

ஐந்து மைல் நீள ஊர்வலம்

(வேலணை நிருபர் கே. வி. கே. ஜெயச்சந்திரமூர்த்தி)

புதிதாக அமுல் செய்யப்பட்டுள்ள ஆயிரம் மீற்றர் பாதுகாப்புச் சட்டத்தினால் தீவுப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையும், இழப்புக்களையும் நீக்குமாறும், மேற்படி பாதுகாப்புவலயத்தை இரத்துச்செய்யுமாறுகோரியும் நேற்று வேலணை, புளியங்கூடல் சந்தியிலிருந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று கரம்பன் ஊடாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை நடாத்தப்பட்டது. இவ்வூர்வலம் சுமார் ஐந்து மைல தூரம் வரை சென்றது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பொது ஸ்தாபனங்கள், ஜன சமூக நிலையங்கள், பிரஜைகள் குழுக்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மத ஸ்தாபனங்கள், வெகுஜன இயக்கங்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் ஆகியோர் பெருந்தொகையாக கலந்து கொண்டனர்.

இவர்கள் கொண்டு சென்ற சுலோக அட்டைகளில் பாதுகாப்பு வலயசட்டத்தை உடன் அகற்று, ஸ்ரீ லங்கா பாசிஸ ஆட்சியாளரே தமிழர்கள் பலிக் கடாவா, தொட்டில் பாலகனும், வயோதிப பாட்டிமாரும் பயங்கரவாதிகளா? என்பன போன்ற சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

ஊர்வலம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்ததும் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் பலர் பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறும், தீவுப் பகுதி மக்கள் படும் இன்னல்கள் பற்றியும் பேசினர். கூட்ட முடிவில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் அங்கு வருகை தராததினால் பதவி வழி உத்தியோகஸ்தர் திரு. பி. பாலசிங்கத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது. அம்மகஜரைப் பெற்றுக் கொண்ட அவர் உயர் அதிகாரிகளிடம் கையளிப்பதாக தெரிவித்தார்.

இம்மாபெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பகுதியிலுள்ள பல பாடசாலைகள் மாணவர் வரவின்றி வெறிச்சோடியிருக்க காணப்பட்டது. தீவுப்பகுதியின் பிரபல கல்லூரியாகிய சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் மாணவர்கள் செல்லவில்லை. அதனால் அக்கல்லூரியும் வெறிச்சோடியிருந்தது.

ஊர்காவற்றுறைக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே சேவையில் ஈடுபடும் தனியார் மினி பஸ்கள் யாவும் நேற்று நண்பகல் பன்னிரண்டு மணி வரை தமது சேவையை பகிஷ்கரித்தனர். ஊர்காவற்றுறை பட்டணத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் நண்பகல் வரை பூட்டப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வான்கள் நடத்தியமறியலும் பஸ் நிலையபாதை தடுப்பும்

குறிப்பிட்ட ஒரு பகுதி ஒன்றிற்கு சேவையிலீடுபடும் வான் காரர்களுக்கும் அதே பகுதிக்கு சேவையாற்றும் போக்குவரத்துசபை ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினையடுத்து நேற்று யாழ். பஸ் நிலையத்தில் பதற்றநிலை தோன்றியது. இதனால் சில பாதைகளினூடான பஸ் சேவைகள் நேற்றுக்காலை 9 மணி முதல் நடைபெறவில்லை.

நேற்றுகாலை கொழும்புத்துறைக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படவிருந்த பஸ் வண்டி நகர முடியாதவாறு அதற்கு முன்னும் பின்னும் இருவான்கள் நிறுத்தப்பட்டு 'மறியல்' செய்யப்பட்டதினையடுத்து இருபகுதியினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. கொழும்புத்துறை பகுதிக்கு சுமார் இருபத்தி ஐந்து வான்கள் சேவையிலீடுபடுவதாகவும், அப்பாதையில் போக்குவரத்துச்சபை பஸ்களை சேவையிலீடுபடுத்த வேண்டாமெனவும், வான் உரிமையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பஸ் நிலையத்தினுள் தனியார் வாகனங்கள் நுழையக்கூடாதென தெரிவித்த போக்குவரத்துச்சபை ஊழியர்கள் வான்கள் உள்ளே வரமுடியாதபடி பஸ் வண்டிகளை நிறுத்தி தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனால் சில பாதைகளுக்கான பஸ்சேவைகள் நேற்று நடைபெறவில்லை.

முல்லைத்தீவு ...

பட பல்வேறு ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன.

இராணுவ முகாமைச் சுற்றியுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் அச்சம் காரணமாக தமது வீடுகளைவிட்டு வெளியேறியபோது எவரும் வெளியேறவேண்டாம் என இராணுவத்தினரால் கேட்கப்பட்டார்களாம்.

கரைச்சிக்குடியிருப்பு என்ற இடத்தில் கட்டிமுடியும் தறுவாயிலுள்ள வீடொன்று பீரங்கித்தாக்குதலால் பலத்த சேதமடைந்தது. வீதியால் சென்று கொண்டிருந்த இதே இடத்தைச் சேர்ந்த ஐயர் ஒருவரும் காயமடைந்தார்.

இதேவேளையில் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு நேற்று முன்தினம்கொண்டுவரப்பட்ட விறகு, வெற்றுச் சாக்கு என்பன இரு லொறிகளுடன் ஆயுதந்தாங்கிய இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மலையகத்தில் ...

மஸ்கெலிய, பொகவந்தலாவ, தலவாக்கொல, நோர்வூட், லிந்தல, ஹட்டன், பத்தல, அக்கரப்பத்தனை, நானுஓயா ஆகிய இடங்களிலேய ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிந்திய செய்தி

இச்சம்பவங்கள் தொடர்பாக டாக்காவிலிருந்து அமைச்சர் தொண்டமான், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு பேசியதாகத் தெரிகின்றது.

பிரார்த்தனை ....

ஒரு நாள் பிரார்த்தனை இயக்கமொன்றை நடத்தி அரச இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்யயாழ்ப்பாணத்திலுள்ள பல அமைப்புக்கள் ஆலோசித்துள்ளன. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

முருகேசு வேண்டுகோள்

யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களை இன்று முற்பகல் மட்டும் மூடி, இன்று நகரில் நடைபெறும் கண்டன ஊர்வலத்தில் வர்த்த நிலைய அதிபர்கள், ஊழியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு, யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் திரு எஸ். வி. முருகேசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

படுகொலைகளை ...

தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்திருக்கும் அறிக்கையின்படி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியுடன் தான் பேச்சு நடத்தவிருப்பதாக அப்போது ஜனாதிபதி கூறினார்:

கிளிநொச்சியில் பத்துப்பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான பதற்றம் குறித்தும் திரு. டிக்ஸிற் அவரிடம் பிரஸ்தாபித்தார்.

இது தொடர்பான விசாரணைக்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

வவுனியா....

படை முகாமை அடுத்த பகுதிகளில் கேட்டுக்கொண்டிருந்த தொடர்ச்சியான வெடிச்சத்தமும் மக்களுடைய நடமாட்டக் குறைவுக்குக் காரணமாயிருக்கலாமெனவும், படைகள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தமையே வெடிச்சத்தங் கேட்கக் காரணமெனவும் நம்பப்படுகிறது.

இன்று....

கச்சேரியைச் சென்றடையும். பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள், ஸ்தாபனங்களும் தனித்தனியாக ஊர்வல இறுதியில் மகஜர் சமர்ப்பிக்கவுள்ளன.

பிரஜாவுரிமை....

யமைக்க வேண்டுமென்று சுப்ரீம் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இதன்படி இம் மசோதா நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

யாழ். ஆஸ்பத்திரி சேவை பெருமளவில் பாதிப்பு

சமீபகால சம்பவங்களினால் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களதும், கடமையாற்றும் ஊழியர்களதும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் முன்பு போன்று வைத்திய சேவைகளை வழங்க முடியாத நிலையில் வைத்தியசாலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நோயாளர்கள் இயன்றளவு தமக்கருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைபெற வேண்டுமெனவும் அத்தியாவசிய சேவைகளை மட்டுமே யாழ். வைத்தியசாலையில் வழங்கக் கூடியதாக இருக்குமெனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஏற்படும் சிரமங்கள் பாதுகாப்பு சம்பந்தமான பிரக்சினைகள் தீர்க்கப்பட்டாலே நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மரண விசாரணையில் சாட்சியம்:

படம் பார்த்திருக்கையில் ஜெயலட்சுமி சுடப்பட்டார்

(வவுனியா)

"சனி இரவு எங்கள் வீட்டில் எட்டுமணி முதல் ரீ.வியில் மூன்றுபடங்கள் காட்டப்பட்டன. இரண்டு படங்கள் காட்டி முடிந்து மூன்றாவது படம் நடந்து கொண்டிருக்கும்போது பூந்தோட்டப் பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது. உடனே ரீ. வியை நிறுத்தினோம். படம் பார்க்க வந்தவர்கள் இவ்வேளை ஓடமுற்பட்டனர். அவர்களை ஓட வேண்டாமென தடுத்து நிறுத்தி இருத்தினோம். சிலர் இதனையும் மீறி ஓடினர். இவ்வாறு கடந்த ஞாயிறு அதிகாலை இராணுவத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளம் பெண் முருகேசு ஜெயலட்சுமியினது மரண விசாரணையின் போது ரீ. வி காட்டிய வீட்டு ரிமையாளர் முகமட் ஜுனைடன் சரஸ்வதி சாட்சியமளிக்கும்போது கூறினார். வவுனியா வைத்தியசாலையில் மாவட்ட மரணவிசாரணை அதிகாரி ஆர். வி. வில்வராஜா விசாரணையை மேற் கொண்டிருந்தார்.

சரஸ்வதி தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; சிறிது நேரத்தில் எமது வீடும் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்து ஐந்து ஆண்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் வீட்டைச் சுற்றி வெடிச் சத்தங்கள் கேட்டன. விடிந்த பின் வீட்டுக்கு ரீ வி பார்க்கவந்த ஜெயலட்சுமி (வயது 16) இறந்து கிடப்பதாகக் கேள்விப்பட்டோம்" என்றார்.

வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. ஸ்ரீராஜேஸ்வரன், தலையில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் இரத்தப் பெருக்கினாலும் அதிர்ச்சியினாலும் மரணம் ஏற்பட்டுள்ளது என்றார். விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மாநகரசபையின் ...

கடத்தப்பட்டது ஏழாவதாகும் இதனுடன் இணைக்கப்பட்டிருந்த பெட்டி திருநெல்வேலியில கழற்றி விடப்பட்டிருந்தது.

இக்கடத்தலால் நகரின் சுகாதாரசேவை மோசமாகப் பாதிக்கப்படுமென அச்சம் தெரிவித்துள்ள ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் இதனை மீட்டுத்தருமாறு சகல அமைப்புகளிடமும் வேண்டியுள்ளார்.

செயலக...

பல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கக் கூடியமுறையில் பரவலாக நடாத்த ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

லலித்...

கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் தன்னைச் சந்திக்குமாறு அமைச்சர் அத்துலத் முதலி யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அன்னையர் முன்னணியிடம் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

சூடுபட்டு காயம்

தெல்லிப்பளை, வசாவிளான் வீதியில் முன்னாள் அரசாங்க அதிகாரியொருவர் முகாம் பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்குக் காயமடைந்தார்.

சித்த வைத்திய...

இவ்வாறு, துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் "சித்த மருத்துவம் 1985" மலர் வெளியீட்டு சிறப்புரை நிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்தார்:

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முதலாவது ஆண்டு விழா நேற்று கைதடியில், இத் துறையின் தலைவர் டாக்டர் எஸ். பவானி தலைமையில் நடைபெற்றது.

கொழும்பில் சித்த வைத்தியம் பயின்ற மாணவர்கள் பலர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று யூலை மாதத்திற்கு பின்னர் மீண்டும் அங்கு சென்று கல்வியைத் தொடர அச்சம்கொண்டனர். இம் மாணவர்களின் நலன் கருதி நாம் கைதடியிலிருக்கும் கட்டிடத்தைத் தெரிவு செய்து அதனை சித்த வைத்திய மாணவர்களிடம் சிபார்சு செய்யும்படி கொழும்பிலிருக்கும் அதிகாரிகளிடம் கேட்டதனாலேயே இது ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு பல மாணவர்கள் கல்வி பயின்று வைத்தியர்களான பின் எமது மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கின்றதெனவும் துணைவேந்தர் சொன்னார்.

பல்வேறு நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெறறன.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 29-01-86 புதன்கிழமை அச்சிடு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336